
The Nation
Rested
தேசம்
ஓய்ந்திருந்தது

# தேசம் ஓய்ந்திருந்தது

2நாளா-36:21 கர்த்தர் எரேமியாவின் வாயினாலே சொன்ன வார்த்தை நிறைவேறும்படிக்கு, தேசம் தன்னுடைய ஓய்வு வருஷங்களை இரம்மியமாய் அநுபவித்துத் தீருமட்டும், அது பாழாய்க்கிடந்த நாளெல்லாம், அதாவது, எழுபதுவருஷம் முடியுமட்டும் ஓய்ந்திருந்தது.

## 70 வருடம் தேவன் தேசத்திற்கு ஓய்வு கொடுத்தார்

## காரணம் என்ன?

## தேவன் கேட்டதை ஜனங்கள் கொடுக்காததால் அவரே எடுத்துக்கொண்டார்

லேவி-25:2 நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: நான் உங்களுக்குக் கொடுக்கும் தேசத்திலே நீங்கள் போய்ச் சேர்ந்திருக்கும்போது, தேசம் கர்த்தருக்கென்று ஓய்வு கொண்டாடவேண்டும்.

3. ஆறுவருஷம் உன் வயலை விதைத்து, உன் திராட்சத்தோட்டத்தைக் கிளைகழித்து, அதின் பலனைச் சேர்ப்பாயாக.

4. ஏழாம் வருஷத்திலோ, கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் ஓய்வு தேசத்திற்கு இருக்கவேண்டும்; அதில் உன் வயலை விதைக்காமலும், உன் திராட்சத்தோட்டத்தைக் கிளைகழிக்காமலும்,

5. தானாய் விளைந்து பயிரானதை அறுக்காமலும், கிளைகழிக்காதே விட்ட திராட்சச்செடியின் பழங்களைச் சேர்க்காமலும் இருப்பாயாக; தேசத்துக்கு அது ஓய்வு வருஷமாயிருக்கக்கடவது.

ஜனங்கள் தேசத்திற்கு ஓய்வு வருஷத்தை ஆசரிக்காததால் அல்லது கொடுக்காததால் தேவனே அதை எடுத்துக் கொள்ளுகிறார்.

தேவன் கேட்டதை கொடுக்காவிட்டால் அவரே எடுத்துக்கொள்ளுவார்

உதாரணம்:

தேவன் எகிப்தியரிடம் என் ஜனங்களை போகவிடு என்று கேட்டார் அவன் கொடுக்கவில்லை அவரே எடுத்க்கொண்டார்

## கேட்டார் கொடுக்கவில்லை

யாத்-5:1 பின்பு, மோசேயும் ஆரோனும் பார்வோனிடத்தில் போய்: இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் வனாந்தரத்திலே எனக்குப் பண்டிகை கொண்டாடும்படி என் ஜனங்களைப் போகவிடவேண்டும் என்று சொல்லுகிறார் என்றார்கள்.

2. அதற்குப் பார்வோன்: நான் இஸ்ரவேலைப் போகவிடக் கர்த்தரின் வார்த்தையைக் கேட்கிறதற்கு அவர் யார்? நான் கர்த்தரை அறியேன்; நான் இஸ்ரவேலைப் போகவிடுவதில்லை என்றான்.

## 10 வாதைகளை தேவன் அனுப்பினார்

1. தண்ணீர் இரத்தமானது – யாத் 7:14-24
2. தவளை - யாத் 7:25-8:15
3. பேன்கள் - யாத் 8:16-19
4. வண்டுகள் - யாத் 8:20-32
5. மிருகஜீவன்களுக்கு கொள்ளைநோய் - யாத் 9:1-7
6. எரிபந்தமான கொப்புளங்கள் - யாத் 9:8-12
7. கொடிய கல்மழை – யாத் 9:13-35
8. வெட்டுக்கிளிகள் - யாத் 10:1-20
9. தடவிக்கொண்டிருக்கத்தக்கதான இருள் - யாத் 10:21-29
10. முதற்பேறனைத்தும் சாகும் - யாத் 11:1-12:36

## அவரே எடுத்துக்கொண்டார்

யாத்-12:51 அன்றைத்தினமே கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை அணியணியாய் எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினார்.

தேவன் கேட்டதை கொடுக்காவிட்டால் அவரே எடுத்துக்கொள்ளுவார். அவரே எடுத்க்கொள்ளும் போது அது வலி நிறைந்ததாயிருக்கிறது.

## தேவன் கேட்டதை கொடுத்துவிட்டால் அதை திரும்ப நமக்கே கொடுக்கிறார்.

ஆபிரகாமிடம் மகனை கேட்டார், கொடுத்தான் அவர் அதை திரும்ப கொடுத்தார்.

ஆதி-22:2 அப்பொழுது அவர்: உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு, மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு என்றார்.

16. நீ உன் புத்திரன் என்றும், உன் எகசுதன் என்றும் பாராமல் அவனை ஒப்புக்கொடுத்து இந்தக் காரியத்தைச் செய்தபடியால்;

17. நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப்போலவும், கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் என்றும்,

## தேவன் உன்னிடம் கேட்டது என்ன?

ஜெப நேரம்

ஒய்வு நாள்

தசமபாகம்

உன் வாழ்வை

உன் பிள்ளையை

உன்ன முழு நேர ஊழியத்திற்கு அழைத்தார்

சுவிசேஷ ஊழியம்

# Conclusion

அந்த 70 வருடங்களில் தேவன் அவர்களுக்கு அநேக காரியங்களை கற்றுக்கொடுத்து அவர்களுக்கு மறுவாழ்வு கொடுத்தார்

நமக்கும் ஒரு மறுவாழ்வு இருக்கிறது.

70 நாட்கள் தேவ சமூகத்தில் காத்திருந்து மாறவேண்டியதில் மாற போகிறோம்

வெளி-2:5 ஆகையால், நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக; இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, நீ மனந்திரும்பாதபட்சத்தில், உன் விளக்குத்தண்டை அதனிடத்தினின்று நீக்கிவிடுவேன்.